[10th May 1954

(*b*) whether the Government have accepted any of the proposals?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) Yes.

" (*b*) The proposals are under consideration."

MR. SPEAKER :—" Questions over."

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTIONS *RE*.

(1) LATHI CHARGE ON TAJ MAHAL BEEDI FACTORY WORKERS.

MR. SPEAKER :—" The hon. Member, Mr. P. Jeevanandam has given notice of an Adjournment Motion to discuss an urgent **matter of public importance. The Motion reads :**

'That the House do ajourn its business to discuss an urgent matter of public importance, viz.

" the Government's action in ordering the Police to iathi **charge the peaceful** workers of the Taj Mahal Beedi **Factory resulting in injuries to some of the workers including Gosha** woman workers ".'

Now I wish to know what the hon. Member has to say, how the matter is urgent and how the Government are responsible for this."

*** SRI P. JEEVANANDAM** :—" சபைத்தலைவர் அவர்களே, 8-ம் தேதியன்று மாலை அமைதியாக உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்துகொண்டிருந்த **1,000**-க்கு மேற்பட்ட தாஜ் மஹால் பீடி குலாம் காதர் டிப்போவிலுள்ள தொழிலாளர்களை பலவந்தமாக போலீசார் வெளியேற்றியிருக்கிறார்கள். குலாம் காதர் டிப்போவின் முதலாளி அபீப், உதவி கமிஷனர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர்கள், சார்ஜ்ஜெண்ட்களுடன் இரண்டு லாரி நிறைய வந்த போலீஸ் உதவியுடன் உள்ளிருந்து அமைதியாக வேலை நிறுத்தம் செய்துகொண்டிருந்த முஸ்லிம் கோஷா பெண்களை மிதித்துக்கொண்டே உள்ளே சென்று அவர்களை வெளியே விரட்டிவிட்டார்கள். அவர்கள் மூன்று நாட்களாக உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். இலை, புகையிலை, கூலி இவைகளை நிர்ணயிப்பதற்காக விவகாரம் **adjudication**-ல் இருந்தபோது, திடீரென்று 5-ம் தேதி காலை முதலாளி, இலையை 4 **bundle**-லிலிருந்து $2\frac{1}{2}$ **bundle**-ஆகவும் $1\frac{1}{4}$ படி புகையிலையை **1-1/8** படியாகவும், குறைத்து **1,000** பீடிக்கு **3/4** அணா வீதம் குறைத்ததால் அவர்கள் அமைதியாக வேலை நிறுத்தம் செய்தார்கள். ஆறு லட்சம் பீடிகள் அங்கே இருந்தன. முதலாளிகளுடைய சரக்கையும் இந்தத் தொழிலாளர்கள் செய்துள்ள **6** லட்சம் பீடிகளையும் அகற்றிக்கொண்டு, பூட்டைப் பூட்டிக்கொண்டு முதலாளியிடம் சாவியைக் கொடுத்து தொழிலாளர்களை வெளியே துரத்திவிட்டார்கள். கனம் முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் நாடார் அவர்களுக்கு இந்த முதலாளியைப்பற்றி நன்றாகத் தெரியும். **1950**-ம் ஆண்டிலேயே காங்கிரஸ் தொழிலாளர்கள் சத்தியாக்கிரகம் செய்திருக்கிறார்கள். கனம் தொழில் அமைச்சரிடம் இதைப்பற்றி நான் 8-ம் தேதி இரண்டு தடவைகள் **represent** செய்திருக்கிறேன். முதலில் அவர் **Labour Commissioner** இடம் இதைப்பற்றிப் பேசி முடிவு செய்வதாகச் சொன்னார். இரண்டாம் தடவை கேட்டபொழுது **Labour Commissioner 6**-ம் தேதியே **settle** ஆகிவிட்டதென்று சொன்னதாக கூறினார். **Labour Commissioner** சொல்லியது சரியல்ல. ஏனென்றால், **7**-ம் தேதி இரவு $10\frac{1}{2}$ மணிக்கு நான் அந்த டிப்போவில் அந்தத் தொழிலாளர்களைப் பார்த்தேன் என்றேன்.

கனம் தொழில் அமைச்சர், 'நான் மீண்டும் **Labour Commissioner**-ஐ விசாரிக்கிறேன்' என்று சொன்னார். ஆனால், 8-ம் தேதி மாலை முதலாளி போலீசாருடன் சென்று தொழிலாளிகளை பலவந்தமாக அகற்றியிருக்கிறார். இந்தச் சம்பவம் தொழிலாளிகளிடையேயும், பொது மக்களிடையேயும் மிகுந்த பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. தாஜ் மஹால் பீடி டிப்போக்களிலுள்ள தொழிலாளர்களிடையேயும் சென்னை நகரத்திலுள்ள மற்ற பீடித் தொழிலாளர்களிடையேயும் பரபரப்பை உண்டு பண்ணியிருக்கிறது. எனவே இது விஷயத்தில் ஒரு பகிரங்க விசாரணை நடத்துமாறு கேட்டுக்கொண்டு இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை அனுமதிக்கும்படி தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

Sri M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அக்கிரமமான சம்பவத்துக்கு சர்க்கார்தான் நேரிடையான பொறுப்பாளி. போலீஸ் மான்யத்திற்கு இந்தச் சபை பணம் ஒதுக்கித்தான் போலீஸ் நிர்வாகம் நடைபெறுகிறது. இந்தக் கோஷா பெண்களை அடிப்பதற்காக உபயோகிக்கப்பட்ட குச்சிகள்கூட நாம் ஒதுக்கிய பணத்திலிருந்துதான் வாங்கப்படுகின்றன. ஆகவே, இந்தப் போலீஸ் நடவடிக்கைகள் பூராவுக்குமே கனம் முதல் மந்திரி காமராஜ் நாடார் அவர்களும் சர்க்கார் கட்சித் தலைவர் ஸ்ரீ சுப்பிரமணியமும் பொறுப்பாளிகள். ஒரு விதத்திலே நமது தொழில் மந்திரி ஸ்ரீ பக்தவத்சலமும் பொறுப்பாளியாவார்கள். ஏனென்றால் அவர்கள் குறுக்கிட்டு சமரசம் ஏற்படுத்துவதற்குத் தவறியிருக்கிறார்கள். கனம் முதல் அமைச்சரோ, அல்லது சர்க்கார் கட்சித் தலைவரோ, தொழிலாளர்கள் மீது இம்மாதிரி போலீசார் அக்கிரமமான நடவடிக்கைகளை எடுக்கக்கூடாது என்று போலீசாருக்கு ஒரு தாக்கீதோ அல்லது உத்தரவோ அனுப்பியிருந்தால் அவர்கள் துணிச்சலாக இப்படிச் செய்திருக்கமாட்டார்கள். குறிப்பாக, இந்தச் சம்பவம் சிறுபான்மையாயிருக்கக்கூடிய முஸ்லீம்களிடையேயும் பீடித் தொழிலாளர்களிடையேயும் பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது. ஆகவே, இந்தச் சம்பவம்பற்றி ஒரு பகிரங்க விசாரணை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

The Hon. Sri C. SUBRAMANIAM :—" The adjournment motion relates to the alleged lathi charge by the police on some workers on a particular day. The labour dispute as such does not come within the ambit of the adjournment motion. I wish the hon. Member Sri Jeevanandam had given notice of a short notice question so that I could have collected all the facts and placed them before this House, and the House could have then been in a position to judge whether the Government had failed in their duty. I assure the hon. Deputy Leader of the Opposition that it is not as if we want the police to take action in all cases. We want them to take action only for the maintenance of law and order. I am not aware of the circumstances in which the lathi charge took place, if at all it took place. Therefore, I request the hon. Member Sri P. Jeevanandam to put a short notice question. I shall answer that giving all the facts. If he feels dissatisfied with the answer, then we may look into the matter."

Mr. SPEAKER :—" கனம் அங்கத்தினர் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை வற்புறுத்தவேண்டாம் என்று கனம் மந்திரி அவர்கள் கேட்டுக்கொள்ளுகிறார்கள்."

Sri P. JEEVANANDAM :—" நான் வற்புறுத்தவில்லை."

Mr. SPEAKER :—" The hon. Member is not pressing the adjournment motion."